# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : | STC.286/2023 | Date: 04.07.2025 |
| Deposition of Witness for | : | **பு.சா.1** | |
| Name | : | **ராஜா** | |

**(சாட்சி மனுவின்மீது திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை :-**

எனக்கு தமிழ், ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியும் என்றால் தெரியும். எதிரியை எவ்வாறு தெரியும் என்ற விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்ற விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி என்னிடம் எந்த தேதியில், எந்த இடத்தில் பணம் கேட்டார் என்றால் 01.11.2022 ம் தேதி பணம் கேட்டார். எதிரி பணம் கேட்ட அன்றே என்னிடம் கையில் பணம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எதிரிக்கும், எனக்கும் எந்த வரவுசெலவும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு எதிரிக்கும், எனக்கும் எந்த வரவுசெலவும் உண்டு என்பதை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை எங்கு வைத்து கொடுத்தேன் என்பதை வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும்

தொகையை எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அந்த சமயத்தில் என்னுடன் எனது அம்மா இருந்தார். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகை விவசாயம் மூலமாகவும், நகையை அடமானம் வைத்து கிடைத்த தொகையாகும். நகையை எந்த வங்கியில் வைத்தேன் என்றால் கனரா வங்கி, வைகுந்தம் கிளையில் ஒரு லட்சத்திற்கு நகையை அடமானம் வைத்தேன் , வங்கியில் அடமானம் வைத்ததற்கான ரசீது எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யயில்லை என்றால் சரிதான். இது சம்பந்தமாக வைகுந்தம் வங்கியின் மேலாளரை நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எதிரி எந்த முகவரியில் குடியிருக்கிறார் என்றால் 78, ரத்தினசாமிபுரம், சேலத்தில் குடியிருக்கிறார். எதிரி மேற்சொன்ன முகவரியில்தான் குடியிருக்கிறார் என்பதற்கு ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை. எதிரிக்கு கடன்கொடுத்தபோது என்ன ஆவணம்கொண்டு வரச்சொன்னேன் என்றால் காசோலை மட்டும் கொண்டுவரச்சொன்னேன். எதிரிக்கு கடன் கொடுத்தது சம்பந்தமாக வேறு எந்த ஆவணமும் நான் வாங்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் எதிரிதான் தாமாக முன்வந்து காசோலை கொடுத்தார் என்று குறிப்பிட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. எதிரி எனக்கு எந்த தேதியில் காசோலையை வங்கியில் கலைக்சனுக்கு போடச்சொல்லி யார் மூலம் சொன்னார் என்றால் நண்பர் மூலம் சொன்னார் அவரே சொல்லவில்லை என் நண்பர் பெயர் ஆனந்த் ஆகும். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேள் என்றால் சரிதான். எதிரியிடம் கொடுத்ததாக சொல்லும் தேதியில் என்னிடம் ரூ.9,50,000/- பணம் இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை

என்றால் சரிதான். நான் வருமான வரி தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி எங்கு குடியிருக்கிறார் என்ற விவரம் தெரியாது என்றும், அன்பழகன் என்பவர் மூலம்தான் இந்த வழக்கு காசோலையை தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியும், எதிரியின் கணவரும், சேலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு ஆவணங்கள் உள்பட பிற ஆவணங்களை திரும்ப ஒப்படைக்ககோரி ஒ.எஸ். நெ. 414/2023 என்ற வழக்கை தாக்கல்செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கே.பி.எஸ். அன்பழகன் என்பவர் இந்த வழக்கு எதிரி மீது ஜே.எம்.3, சேலம் நீதிமன்றத்தில் எஸ்.டி.சி. 4343/2023 என்ற ஒரு வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள எதிரியின் முகவரி தவறான முகவரி என்றால் சரியல்ல. பொதுவாக ஒருவருக்கு கடன் கொடுத்தோம் என்றால் கேஷ் வவுச்சரில் கையொப்பம் பெறுவோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியிடம் நான் எந்தவித கேஷ் வவுச்சரும் பெறவில்லை என்றால் சரிதான். வழக்கு காசோலையை யார் நிறப்பினார்கள் என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அன்பழகனுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் இந்த காசோலை வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் நேரத்தில் எனது தாயார் இருந்ததாக சொல்லிஉள்ள நிலையில் அவரை நான் விசாரிக்க தயாராக உள்ளேன் என்றால் சரிதான். எதிரிக்கு என்ன அவசர தேவை என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு திருப்பி செலுத்தும் வருமானம் உள்ளதா என்ற விவரத்தை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்ன தொழில் செய்துள்ளார்

என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் இல்லத்தரசியாக உள்ளார். எதிரியின் கணவரிடம் காசோலை வாங்கினேனா என்றால் இல்லை. எதிரியின் கணவர் என்ன தொழில் செய்துவருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் குடும்ப உறுப்பினர்களை பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி எத்தனை வருடங்களாக தெரியும் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகாரிலும் குடிறப்பிட்டவில்லை என்றால் சரிதான். எதிரியை பற்றி எனக்கு எந்தவித விவரங்களும், தெரியவில்லை என்றும், அன்பழகன் சொல்லிகொடுத்து நான் இந்த வழக்கில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மேற்கண்ட முகவரியில் வசிக்கவில்லை என்றாலும், நான் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் கடன் தொகையை எதிரி பெறவில்லை என்றாலும், பொய் வழக்கு என்பதாலும் தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Raja